மக்கள் கொடுத்துள்ள புகார்கள் பேரிலும் அமைச்சர் அவர்களிடம் கொடுத்துள்ள புகார்களின் பேரிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முறையாக தீவிரமாக எடுக்காததால் தவறு செய்பவர்கள், மேலும் தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே மாநில நிலவள வங்கி உயர் அதிகாரிகள் முறையான நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நில வள வங்கி மூலம் ஆதி திராவிட மக்களுக்கு கடன்கள் வழங்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி அவர்கள் பகுதியில் அல்லது அவர்கள் தாலுகாவில் நிலவள வங்கியில் ஏதாவது பிரச்னை இருக்குமானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கத் தயார். மொத்தத்தில், நில வள வங்கிகள் ஆதி திராவிட பெருமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் கடன்கள் வழங்க அரசாங்கம் அதற்கு வேண்டிய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், அறிவிப்புகள் நிலவள வங்கிகளுக்கு அனுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 330-க்கான பதில் வரவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வினா தள்ளிவைக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது என்றால் அது வேறு விஷயம். ஆனால் கேள்விக்கு பதில் வரவில்லை என்பது It cannot be a ground. கேள்விக்குப் பதில் வரவில்லை என்றால் அதற்கு அமைச்சர்தான் பொறுப்பு. Once it is included in the list, the Hon. Minister is bound to answer.

உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்தும் திட்டம்.

330—(* வினா எண். *21734*)—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகட்கு உதவி செய்யும் நோக்கத்தோடு 'உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' (Farmers Economic Development Corporation) அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) : அரசாங்கத்தினுடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். இதற்காக முந்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வேளாண் பெருங்குடி மக்களையும் அதிகாரிகளையும் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டி, ப்ரிலிமினரி கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை செய்தார்கள். வெகு விரைவில் அமைக்கப்படும் என்று எல்லாம் சொன்னார்கள். ஆகவே அதை விரைவாக அமைத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைப்பது பற்றிய செயற் குறிப்பு மாநில திட்டக் குழுவின் பரிசீலனைக்குப் பின் அரசின் ஆய்வில் இருந்துவருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற வேளாண் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், விவசாயம் மற்ற வகைகளில் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குகிற விதத்தில் அதற்கேற்ப பல்வேறுவிதமான நலப் பணிகள், உதவிகள் செய்யவும், பல நோக்கில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்வதற்காகவும் இந்த நிறுவனம் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரது கேள்வி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. குற்றச்சாட்டு இல்லாமல் வினா நேரத்தில் கேளுங்கள்.

(முற்பகல் 9-30.)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க மேம்பாட்டுக் கழகம் ஆராய்ச்சி செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நியாய விலை கிடைப்பதற்கு, வேளாண்மைத் துறை அமைச்சருடைய இலாகாவிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாற்றுகின்ற உழவர்களுக்கு எப்படி நியாய விலை வழங்கப்படுகின்றது ? அல்லது பொருளாதார ரீதியில் உதவி செய்யும் வகையில் அதிலே கடன் போன்ற உதவிகள் அல்லது மானியம் போன்ற உதவியோ செய்யப்படுமா ? அல்லது சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற பாகுபாடு வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1984 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விகள் பற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கிறது. அவர்களது பரிசீலனைக்குப் பின்னால், அவர்களுடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப, அரசு முடிவுகளை மேற்கொள்ளும். நியாய விலை கிடைப்பது சம்பந்தமாக, நான் ஏற்கனவே சொன்னது போல், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு இன்னும் அதிகமான அளவில் நியாயமான விலைகள் கிடைக்கவும், அது தவிர இன்னும் பல்வேறு வகையான உதவிகள் செய்வதற்கு, அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதற்கு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்கேற்ப இந்த கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்ந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் பழப்பண்ணைகள் அமைக்கும் திட்டம்.

320—(*வினா எண். 18648)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பழப் பண்ணைகள் எத்தனை இடங்களில் அரசால் துவக்கப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : திருச்சி, பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் பழப் பண்ணைகள் அமைக்க அரசால் அனுமதிக்கப்பட்டு இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாவட்டங்களில் தமிழக அரசின் சார்பாக பழப் பண்ணைகள் அமைக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த 3 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களில் அமைப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இருக்கின்றன. இந்த 3 மாவட்டங்களில் அமைத்தால், தமிழகத்திலேயே இத்தகைய பழப் பண்ணை இல்லாத மாவட்டங்களே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்குத்தான் இந்த 3 மாவட்டங்களில் ஆரம்பிக்கிறோம். மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன.